
# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆனி 14
றஜப். 21
புதன் (28-6-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 8
பதிவு: தொ.பே.இல. 352
விலை சதம் 35


# வரலாறு படைக்கும் தளபதிக்கு வரலாறு காணாத வரவேற்பு!

## அமிர்தலிங்கத்தை ஆரத்தழுவி அன்பைச் சொறிந்தது மட்டுநகர்!

### தமிழ் இளைஞர் பேரவையின் சரித்திர சாதனை!



தந்தை செல்வாவுக்குப்பின் வடக்கு, கிழக்கு என்ற பேதமின்றி தமிழ்த்தேசிய இனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரேயொரு தலைவரும், சிறீலங்கா தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராகி, தமிழ்ஈழ நாட்டின் புதிய சுதந்திர வரலாற்றைப் படைத்துவருபவருமான தமிழர்த்தழபதி திரு. அ.அமிர்தலிங்கம் அவர்களுக்கு மட்டுமாநகர் தமிழ்மக்கள் அண்மைக்கால வரலாறு காணாத அளவு பிரமாண்டமான வரவேற்புஒன்றை அளித்து தம் இன உணர்வையும் விடுதலை உணர்வையும் எடுத்துக்காட்டியுள்ளனர். அலைகடலோ, அணையுடைத்த காவிரியோ என்று பார்த்தோர் வியக்கும் வண்ணம் பல்லாயிரவர் கலந்து கொண்ட வரவேற்பு ஊர்வலத்தில், ஆங்காங்கே கழுத்து நிறைய மலர் மாலை சூட்டியும், கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டும், பாசத்தைக் கொட்டி தங்கள் அன்புத்தலைவரை மட்டக்களப்புத் தமிழ் மக்கள் வரவேற்ற காட்சி பார்த்தோர் மேனியைப் புல்லரித்திடவைத்தது. மட்டக்களப்பின் அண்மைக்கால இயக்க வரலாற்றில் வேறு எவரும் இதுவரை சாதித்திராத இந்த மகத்தான சாதனையை நிலைநாட்டிய மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையை அனைவரும் மனந்திறந்து பாராட்டினர்.

24-6-78 சனிக்கிழமையன்று, ஈழத்தமிழகத்தின் தலைமகனை வரவேற்பதற்காக மட்டுமாநகர் எழிற்கோலம் பூண்டிருந்தது. வடக்கு, கிழக்கு என்று தமிழினத்தை கூறுபோட முயன்றவர்களின் முகத்தில் கரிபூசி, தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையை மேலும் நிலைநாட்டும் வகையில், மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்கள் தமிழ் இனத்தேசியத் தலைவரான திரு! அமிர்தலிங்கம் அவர்களை நெஞ்சார வரவேற்றனர்;

வீதிக்கு வீதி அலங்காரப் பந்தல்கள், உதய சூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட வரவேற்பு வளைவுகள், அதில் வாழ்த்துமுழக்கங்கள். அலங்கார ஜோடனைகள் ஆகியவற்றுடன் பரபரப்பும் எழுச்சியும் பூரிப்புமாக காட்சியளித்தது மட்டுமாநகர். மட்டக்களப்பு கோட்டைமுனைப் பாலத்தடி தனி அழகுடன் காட்சிதந்தது.

தமிழ்ஈழ முதல்வா வருக!
தமிழர் தளபதியே வருக!
தன்மானத்தலைவா வருக!
தந்தையின் வாரிசே வருக!
விடுதலை வேழமே வருக!

என்றவாறு பலவித முழக்கங்கள் அலங்கார வளைவுகளில் காணப்பட்டு குருதியில் சூடேற்றியது.

தமிழர் தலைவரை வரவேற்கும் விதமாக மட்டு நகரையே எழிற் கூடமாக்கி வைத்திருந்தனர் மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினர். தமிழ் இளைஞர் பேரவையின் இந்த ஏற்பாடுகளுக்கு மட்டக்களப்பு தமிழ்மக்கள் குதூகலத்துடன் நல்லாதரவு தந்தனர்.

தமிழ்த்தலைவர் திரு.அமிர்தலிங்கம் அவர்கள், ஊறணிச் சந்தியிலிருந்து, தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர்

—3-ம் பக்கம் பார்க்க

## 'தமிழினத்தின் வாழ்வுக்காக உயிர்கொடுக்கவும் தயார்'

### பாட்டாளிபுரத்தில் அமிர் உணர்ச்சியுரை!

"எனக்கு இங்குயாரோ சிலர் கொடும்பாவி கட்டியதாக இங்குள்ள என் அருமைத்தம்பிமார் சிலர் தங்கள் ஆத்திரத்தைக் கொட்டினர். நான் அந்தத்தம்பிகளுக்கு சொல்லுவேன்—எனக்கு கொடும்பாவி கட்டினாலென்ன—அல்லது என்னைச் சுட்டுக் கொன்றாலென்ன—தமிழினத்தின் ஒற்றுமைக்கும், தமிழ்ஈழத்தின் விடுதலைக்கும், தமிழ் சமுதாயத்தின் தன்மானத்தைக் காப்பதற்கும் என் உயிரையும் தரச் சித்தமாக இருக்கிறேன். தமிழ் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக எத்தகைய பழிச் சொற்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். எதையும்தாங்கும் இதயத்துடன்தான் நான் இலட்சியப்பணியில் ஈடுபட்டிருக்கிறேன்."

இவ்வாறு தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் பாட்டாளிபுர மைதானத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார். இக் கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் மேலும்பேசுகையில் கூறியதாவது:-

"மட்டக்களப்பு மண்மீது

—4-ம் பக்கம் பார்க்க

## காசி வந்ததும் கரவொலி வானைமுட்டியது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதியயாப்பின்படி அந்தந்தத் தொகுதி தேசிய அரசுப்பேரவைஉறுப்பினரே தொகுதி கூட்டணி அமைப்பாளராக இருப்பார். இதன்படி மட்டக்களப்பு தொகுதி கிளைக்கு மட்டுநகர் பா. உ. வான திரு. செ. இராசதுரை தலைவராக இருக்கும் அதே சமயம், தொகுதிக்கிளையின் செயலாளராக கவிஞர் காசி ஆனந்தனே இருக்கவேண்டும் என்ற அடிப்படையில், மட்டக்களப்பு தொகுதி இயக்க அமைப்புவேலைகளில் ஏற்பட்டிருந்த ஸ்தம்பித நிலைக்கு இப்போது தீர்வு காணப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பில் திரு. பூ. கணேசலிங்கம் பா. உ. அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது நாள் (25.6.78) பொதுச்சபைக் கூட்டத்தை தொடர்ந்து மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர், உதவி அமைப்பாளர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாலோசனைக் கூட்டத்தில் கூட்டணியின் இரு செயலதிபர்களான திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு. பூ. கணேசலிங்கம், கல்குடா தொகுதி அமைப்பாளர் திரு. சம்பந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்: இதன் மூலம் மட்டக்களப்பு கூட்டணி அமைப்பு வேலைகளிலிருந்து வந்த ஸ்ம்பித நிலைக்கு ஒரு முடிவு காணப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு தொகுதி கிளைக்கு இராசு தலைவர், காசி செயலாளர்

### நீண்டகால பிரச்சினைக்கு சமரசத் தீர்வு!

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டத்தின் கீழ் ஒரு திங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், 24-6-78 காலை விடுதலை செய்யப்பட்டதும்; [illegible] மட்டக்களப்பில் வரவேற்பு விழா நடைபெறுவதறிந்து உற்சாக மிகுதியால் அதிலே

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் அகதிகளாக குடியேறியுள்ள மலையகத் தமிழர்களை வவுனியாத் தொகுதி உள்ளூர் தமிழ்மக்கள் பாரபட்சம் காட்டி நடத்துவதாக இ. தொ. கா.வைச் சேர்ந்த திரு. என். விஜயசிங்கம் அவர்கள் பத்திரிகையில் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் வவுனியாவில் விவசாயம் செய்துவருபவரும், 34, பேர்ணண்டோ வீதி கொழும்பு-6 ஐச் சேர்ந்தவருமான திரு. ஆ. கனகசபாபதி அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள கட்டுரையை இங்கு வெளியிட்டுள்ளோம். கட்டுரையிலிடம்பெற்றுள்ள கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களே. —ஆர்.

# குடியேறியுள்ள மலையக தமிழ் அகதிகளுக்கு வன்னி மக்கள் எவ்வித பாரபட்சமும் காட்டவில்லை!

நான் வவுனியாப் பகுதியில் உள்ள பறையனாலங்குளத்தில் கமம் செய்கிறேன். இந்தக் கிராமத்தில் 1978ம் ஆண்டு தை மாசம் கிராம அபிவிருத்திச்சங்கம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் அவர்களால் அங்குரார்பணம் செய்யப்பட்டது. அதில் கிராம மக்களால் நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இக்கிராம அபிவிருத்திச்சங்கம் சிறந்த முறையில் நடந்து வருகிறது.

11.6.78 சிந்தாமணி (தினபதி) வார இதழில் வவுனியாவில் பத்தாயிரம் மலைநாட்டு தமிழ் மக்களின் அவல நிலை என்ற தலைப்பில் செய்தி வெளியாகி இருந்தது. அதை வாசித்த பொழுது எனது மனம் மிகவும் வேதனைக்குள்ளானது. இந்த அறிக்கையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலுறவுச் செயலாளர் திரு. என்.விஜயசிங்கம் வெளியிட்டிருந்தார்?

உண்மையில் நடந்த விசயம் என்ன என்று திரு. என், விஜயசிங்கம் அறிந்து அறிக்கை விடவில்லை. ஆவணிக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக வவுனியா, கிளிநொச்சிக்கு வந்தார்கள். வவுனியாவை பொறுத்தளவில் நான் வவுனியாவில் இருந்தபடியால் முழுவிபரமும் நன்கு அறிவேன்.

அகதிகளாக வவுனியா வந்தவர்களுக்கு வவுனியா மக்கள் உடனடியாகசாப்பாட்டு பார்சல் வழங்கினார்கள். உடை இல்லாதவர்களுக்கு தமிழ் மக்களிடமிருந்து உடைகள் சேகரித்து வழங்கினார்கள். இவை எல்லாம் தினமும் நாளேடுகளில் வெளியாகி இருந்தது. இதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் (மலையகத்தமிழர்) வவுனியாவில் குடியேறிய சமயம் தமிழ்அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இவர்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளது, செய்து கொண்டு வருகிறது. இது நாடறிந்த விசயம்.

நான் அறிந்த பகுதிகளில் குடி தண்ணீர் இல்லாதஇடங்களில் கிணறு வெட்டிக் கொடுக்கிறார்கள், வீடு கட்டுவதற்கும், வேய்வதற்கும் பணமாகவும், கிடுகாகவும் வாங்கிக் கொடுக்கிறார்கள், பசி பட்டினியால் வாடாமல் இயன்றளவு குடும்ப நிலைக்கேற்ப பணவுதவி செய்கிறார்கள். வேலை உள்ள இடங்களில் சென்று சம்பாதிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கிறார்கள். டாக்டர்மாரை அமர்த்தி வைத்திய உதவி செய்து கொடுக்கிறார்கள். காந்தி சேவா சங்கக் கிளை மூலம் குழந்தை பிள்ளைகளிற்கு போஷாக்குணவு கொடுப்பிக்கிறார்கள் செஞ்சிலுவை சங்கத்தால் அளிக்கப்பட்ட உடுதுணிகளை நேர்மையான முறையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்க வழி செய்துள்ளார்கள்.

கலவரத்தால் பாதிக்கப்பட்டு மலையகத்தமிழர் வந்த நாள்தொடக்கம்தொடர்ந்து இவர்கள் குடியேறியுள்ள இடங்களை அடிக்கடி சென்று பார்வை இட்டு அவர்களுடன் உரையாடி வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள்;

இந்த விபரம் முழுவதும் வவுனியாக் கிளை இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மதிப்பிற்குரிய பிரதிநிதி அறிவார். இந்த உதவிகளில் தானும் ஒருவராக நின்று நடந்துள்ளார். இன்னம் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தார் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தும் உள்ளார்கள்,

சில மாதத்திற்கு முன்னர் அரசாங்க காணியில் அத்து

## இ.தொ.கா. விஜயசிங்கத்தின் கூற்றுக்கு ஒரு மறுப்பு!

மீறி குடியேறியவர்களை வெளியேற்ற வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்தவுடன் வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் உடனடியாக ஏற்ற நடவடிக்கை எடுத்து தடை செய்தார். இதைக் குடியேறியுள்ள மலையகத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

நான் விசேடமான தகவல்களையும் அறிவிக்கவும் வேண்டியுள்ளேன். பறையனாலங்குளக் கிராமத்துடன் சேர்ந்த கிராமம்தான் செவிடன் குளம் கள்ளியமுறிப்பு. இப்பகுதிகளிலும் மலையகத் தமிழர் குடியேறியுள்ளார்கள். இக் குடியேறிய மக்கள் பீதி கொண்டு தாங்கள் ஓர் சங்கத்தில் சேர்ந்து கொண்டால் தங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் இ.தொ.காங்கிரசில் அங்கத்தவர்களாகப் பதிந்து கொண்டார்கள். வவுனியாக் கிளை இ.தொ.கா. பிரதிநிதியொருவர் அங்கத்தவர் பணம் என்று சிலரிடம் 8/- ரூபா சிலரிடம் 9 ரூபா 50 சதம் இப்படி பலதரப்பட்ட விதத்தில் பணம் பெற்றுள்ளதாக குடி பெயர்ந்து வந்துள்ள மலையக தமிழ் அகதிகள் கூறுகிறார்கள்.

ஆனால் பற்றுச் சீட்டு கொடுபடவில்லையாம். இதில் உள்ள மர்மத்தை அறிந்த செவிடன் குளத்தில் குடியேறியுள்ள மலையகத் தமிழ் மகன் எஸ். நடேஸ் என்பவர், தலைவர் திரு. தொண்டமான் அவர்களுக்கு முழு விபரமும் எழுதி பதிவுத்தபாலில் அனுப்பியுள்ளதை நான் [illegible] வேன்.

இந்த இ.தொ. காங்கிரஸ் பிரதிநிதி குடியேறிய மலையகத் தமிழ் பகுதிகளில் தலைவர், காரியதரிசி தனாதிகாரி என்று ஆட்களை நியமித்து அவர்கள் மூலமாக சந்தாப் பணம் அற விடுகிறாராம். தேயிலை தோட்டம், றப்பர் தோட்டங்களில் ஓர் குடும்பத்தில் எவ்வளவு பேர் வேலை செய்தாலும் அவ்வளவு பேரிடமும் சந்தாப் பணமாக மாதம் 2/- ரூபா தோட்ட நிர்வாகமே கழித்து விடுவார்கள், அந்த முறையை பாதிக்கப்பட்டு பொருளை இழந்து உண்ண உணவின்றி தவிக்கும் அப்பாவி மலையக மக்களிடமும் வற்புறுத்திக் கேட்டுள்ளார். இதை வேண்டிய சாட்சியுடன் நிரூபிக்க முடியும்.

அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்ட பின்னர் சில சில இடங்களில் காணியைக் காட்டி குடியேற விட்டார். இப்படியான குடியேற்றத்தில் கலவரத்தால் பாதிக்கப்படாமல், தமிழ் பகுதிகளில் வருடக்கணக்காக குடியிருந்தவர்களையும் அகதிகளாக்கி குடியேற்றியுள்ளார்; இதையும் நிரூபிக்க முடியும்.

நான் எமது கிராம அபிவிருத்திச் சங்க மூலம் எமது கிராமத்தில் உள்ள ஆலயத்தை புனரமைப்புச் செய்வதற்கு மகா சிவராத்திரி விழாவை சிறந்த முறையில் நடாத்த எண்ணி நடவடிக்கை எடுத்தேன். அதற்கு நான் இ.தொ. காங்கிரஸ் வவுனியாப் பிரதிநிதியிடம் கேட்டேன். இப்பகுதியில் மலையகத் தமிழர்களும் குடியேறி உள்ளபடியால் உங்கள் காங்கிரஸ் பிரமுகர்களையும் இவ் விழாவில் பங்கு பற்றச் செய்வது நல்லது என்று, அவர் தான் மத்திய கமிட்டிக்கு எழுதி ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். விழா நாள் நெருங்கும் சமயம் மூன்று தினங்களுக்கு முன் இப் பிரதிநிதியிடம் கேட்டேன் நாம் விழாவை இட்டு விளம்பரம் செய்ய வேண்டும். உங்கள் கழகச் சார்பில் யார் பங்கு பற்றுகிறார்கள் அவர்களது பெயரை விளம்பர நோட்டீசில்போட வேண்டும் என்று அவர் இன்னும் மத்திய கமிட்டியால் மறு மொழி வரவில்லை என்றார். இதனால் நான் விளம்பர நோட்டிசை பங்குபற்றுபவர்களின் பெயர்களையும் நிகழ்ச்சிகளையிட்டும் அச்சடித்து விளம்பரப்படுத்தினேன். இந்த விளம்பரத்தை [illegible] யா பிரதிநிதி செவிடன் குளத்தில் குடியேறிய மலையகத் தமிழரிடம் கூறியுள்ளார் எமது விழாவில் பங்கு பற்ற வேண்டாம்என்று, அத்துடன் அக்கிராமத்திலிருந்து எமது கிராமப் பாடசாலைக்கு வரும் சிறார்களையும் தடுத்து மறு கிராமப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்.

குடியேறிய மலையகத் தமிழ் மக்களிடம் கூறியுள்ளார் ஊர் மக்களுடன் உறவுகொள்ளவேண்டாம், தனிப்பட்ட முறையில் வாழும்படி இந்தக் கொள்கையை உண்டாக்கினால் வன்னித் தமிழன்; தோட்டக்காட்டு தமிழன், இப்படிப் பிரிவினை உண்டாகவே செய்யும். இதை திரு. என். விஜயசிங்கம் அறியவில்லையா. இதைஅறியாமல் வன்னி மக்கள் பாரபட்சம் காட்டி நடாத்துகிறார்கள் என்று கூறுவது பெரும் தவறு. எம்மைப் பொறுத்தளவில் எமது பகுதி ஊர் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் நல்ல அன்னியோன்யமாய் ஒரு குடும்பத்தவர்கள் நன்மைதீமைகளில் பங்கு பற்றி சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள்.

பெரிய தம்பனை பகுதியில் சில வாரத்திற்குமுன் குடியேறி மக்களுக்கிடையில் அடிபிடி கத்திக்குத்து சண்டைகள் நடந்தது. இதை விசாரிக்க சென்ற கிராம சேவையாளரிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் மக்கள் முறையிட்டார்கள். இ. தொ. காங்கிரஸ் பிரதிநிதி தங்களிடம் பெரும் தொகை கேட்டார், வேண்டினார் என்று, உதவி அரசாங்க அதிபர், பிரதிநிதியிடம் அவர் வேண்டிய கணக்கு விபரம் கிராமசேவையாளர் மூலம் கொடுக்க வேண்டும் என்று அறிவித்துள்ளார். இப்படியான விபரங்களை திரு. என். விஜயசிங்கம் அறிவாரா?

மலையகத் தமிழர் வடபகுதியில் தஞ்சமடைந்து பரிதவிக்கிறார்கள் என்று கண்ணீர் வடிக்கும் விஜயசிங்கம் செய்ய வேண்டியது எவ்வளவோ இருந்தது.

கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டு மலையகத் தமிழர் உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி ஆவணி மாதம் தமிழ் பிரதேசங்களுக்கு சென்றார்களே அன்றிலிருந்து இன்றுவரை இ. தொ, காங்கிரசார் வந்து பார்த்தார்களா? எத்தனையோ லட்சம் தோட்ட தொழிலாளர்களிடம் மாதம் மாதம் சந்தாப் பணமாக பெறுகிறார்களே. அப்பணத்தில் ஓர் பகுதியை இப்படிப் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் மலையகத் தமிழர்களுக்கு உதவமுடியாதா? பணம் படைத்த தமிழ் மக்களிடம் சென்று எமது தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் இவர்களுக்கு புனர்வாழ்வு அளியுங்கள் என்று கேட்டுப் பெற்று உதவக்கூடாதா? இ.தொ.காங்கிரஸ்காரர் நினைத்தால் இம்மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கலாம்.

இதை விடுத்து உண்ண உணவில்லை உடுக்க உடையில்லை. குடிக்க தண்ணீர் இல்லை. பிச்சை எடுக்கும் நிலையில் மலையகத் தமிழர் வடபகுதியில் வவுனியா கிளிநொச்சியில் பரிதவிக்கிறார்கள் என்று அறிக்கைவிட்டுள்ளார்கள். ஆனால் இதையும் அறிவித்து, இப்படிப்பட்ட பரிதவிக்கும் மக்களிடம் சந்தாப்பணம் வேண்டவும், கேட்கவும் மறக்கவில்லை. என்னே பரோபகாரம் இந்தளவில் திரு: என். விஜயசிங்கம் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிந்து சந்தோஷப்பட வேண்டியுள்ளது.

திரு. என். விஜயசிங்கம் இன்னும் சில விசயங்களையும் அறிய வேண்டும். வன்னிப் பகுதி மக்களும் தங்களது வாழ்க்கையை நடத்துவதற்கு அன்றாட கூலி வேலை செய்தே வாழ்கிறார்கள்.

வன்னிப்பகுதியில் கலவரத்திற்குமுன் குடியேறிய மலையகத் தமிழர் நல்ல செல்வாக்குடன் வன்னி மக்களுடன் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இப்படி இப்பொழுது குடியேறிய மலையக மக்களையும் வன்னி மக்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறி அடிக்கடி ஒற்றுமை கூட்டங்களை கூட்டுவது திரு. என். விஜயசிங்கம் போன்றவர்களது கடமை.

வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. தா. சிவசிதம்பரம் பாதிக்கப்பட்டு வவுனியாப் பகுதியில் வந்த மலையகத் தமிழர்களுக்கு அளப்பரிய சேவையை செய்துள்ளார் என்பதை திரு. என். விஜயசிங்கம் அறியாதது பெரும் தவறு.

எதையும் நன்கு ஆராய்ந்து அறிக்கை விடுவதுதான் சிறந்தமுறை இதை இ. தொ காங்கிரஸ் பிரமுகர் உணர வேண்டும்.

**ஆ. கனகசபாபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைக்குகம்யூனிஸ்டுகள் துதிபாடலாமா?

## 'அத்த' இதழுக்கு 'இதிரிகம' சிங்கள இதழ் சாட்டை!

1978 மே திங்களில் வெளியிடப்பட்ட 'இதிரிகம' என்னும் சிங்கள இதழில் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளை மட்டும் தற்போதைய பத்திரிகைத் தணிக்கை விதிகளை அனுசரித்து இங்கு தருகிறோம்.

**1971ல்** அன்றைய பிரபுத்துவ அரசு இளைஞர்களை ஒழித்துக்கட்டும் பயங்கரவாத நடவடிக்கையை மேற்கொண்டபோது வெட்கங்கெட்ட முதலாளித்துவ பத்திரிகையாளர்கள் அதனை ஆதரித்துப் பல படுபொய் பிரசாரங்களை மேற்கொண்டதை நாம் இலகுவில் மறந்துவிட இயலாது.

இன்றுங்கூட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த காடையர்கள் எதிர்க்கட்சியினரின் கூட்டங்களைக்குழப்புவதற்கும் தொழிலாளர்களையும்–பல்கலைக்கழக மாணவர்களையும் தாக்குவதற்கும் கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிட்ட பயங்கரவாதங்களை மேற்கொள்வது பற்றி எதுவுமே அறியாத அப்பாவிகளாக இப்பத்திரிகையாளர்கள் இருக்கின்றனர். எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் சேவையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் யூ. என். பி. காடையர்களால் கொலைசெய்யப்பட்டதை இப்பத்திரிகைகள் மூடி மறைத்துவிட்டன.

கடந்த ஆகஸ்டில் காவல்துறை அதிகாரிகளினால் அல்லது அவர்களது அனுசரணையோடு நாடேங்கும் பரவலாக இடம்பெற்ற 'தமிழர் ஒழிப்பு' பற்றியோ—அத்தகைய பயங்கரவாதச் செயலுக்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களைத் தேடிக்கண்டுபிடித்து தக்க தண்டனை கொடுக்கவேண்டும் என்பது பற்றியோ இப்பத்திரிகைகள் மூச்சே விடவில்லை. அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் துயரநிலையையும், அவர்களது நியாயமான செயலையும்— அவர்களது போராட்ட உணர்வின் உண்மைத் தன்மையையும் திரித்துக்கூறுவதும், அதிகாரவர்க்கத்தின் பயங்கரவாதத்தை மூடிமறைப்பதும் இந்நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கே கைவந்த கலையாகும்;

எனினும் முதலாளித்துவப் பத்திரிகைகளின் இத்தகைய சித்து விளையாட்டுகளுக்கு 'அத்த' பத்திரிகையும் கூடடுச்சேர்ந்து தனது. ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளது.

### கம்யூனிஸ்ட் கொள்கை

'அத்த' இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தினசரிப் பத்திரிகையாகும். உண்மையில் கம்யூனிஸ்ட் என்ற நாமம் சகலவிதமான அடக்கு முறைகளுக்கும்— சரண்டல்களுக்கும் எதிராக அடக்கப்பட்டு சுரண்டப்படும் மக்களோடு ஒன்றிணைந்து போராடுபவர்களுக்கே உரியதாகும்.

எந்த ஒரு மனித இனமும் தம்மீதான அடக்குமுறைக்கு எதிராகபோராடும்போது அதைக் கண்டிப்பது கம்யூனிச வழி அல்ல. தனிப்பட்ட புரட்சியால் தமிழரோ அல்லது வேறோர் இனமோ தமது போராட்டத்தை வென்றெடுக்க இயலாது. எனினும் தமது எதிர்காலம் முற்றாக இருண்டுவிட்டதென்ற நிலையில் நம்பிக்கை இழந்த மக்கள் கூட்டம் அடக்குமுறைக்கு எதிராகத் தனது போராட்ட உணர்வினைப் பலவழிகளில் வெளிப்படுத்துவது இயல்பேயாகும். அவர்களது செயல் எத்துனைதான் விவேகமற்றதாக இருந்தபோதும் அடக்கப்பட்டவர்களைத் தண்டிப்பதோ — அடக்குமுறையாளர்களை வரவேற்பதோ கம்யூனிஸ்ட் கொள்கை அல்ல.

இன்று தென்பகுதி வாழ்வோரைப் போன்றுதான் வடபகுதியில் வாழும் வாலிபரும் வனிதையரும் வேலையின்றி வேதனைப் படுகின்றனர். எனினும் இதுகாலவரை எல்லா முதலாளித்துவ அரசுகளும் தமிழரைப் புறக்கணிக்கும் கொள்கையையே கடைப்பிடித்ததன் காரணமாக தமிழ் இளைஞர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாகஉள்ளது.

அது மட்டுமல்ல; நீண்டகாலமாக அதுவும் விசேடமாக வடக்கு— கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் காவல்துறைஅதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கு இலக்காகிச் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருவதுகம்யூனிஸ்ட் தலைவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா? கடந்த ஆகஸ்டில் அப்பாவித் தமிழ் மக்கள் காவல்துறையினரின் கொடூரமான பயங்கரவாதத்துக்கு இலக்கானது இந்த கேடுகெட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களுக்குத் தெரியவில்லையா? சன்சோனி கமிஷன் முன்பாக கொடுக்கப்படும் வாக்குமூலங்களில் இருந்தாவது அன்று தமிழர்கள் அனுபவித்த இன்னல்களை இவர்கள் புரிந்து கொள்ளவில்லையா?

மேலும் இரகசிய காவல்துறை அதிகாரிகளின் பிடியில் சிக்கியவர்கள் அனுபவிக்கும் சித்திர வதைகள் எதையும் அறியாத சிறு பிள்ளைகளா— கம்யூனிஸ்ட் தலைவர்கள்? அல்லது 'தார்மீக' தலைவர்கள் 4 வது மாடியை நீக்கிவிட்டதால் இரகசிய காவல்துறையினரின் கொடூரமான சித்திரவதைதான், ஒழிக்கப்பட்டுவிட்டன என்று எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா?

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் முதலாளித்துவ அரசுக்கு —விசேடமாக முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் இயந்திரங்களுக்கு முன்னால் மண்டியிட்டு வணங்குவது உண்மையிலேயே வெட்கங்கெட்ட செயலாகும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் இவ்வாறான இரட்டைக் கொள்கையின் காரணமாக அவர்கள் சேர்ந்துள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணி யாழ்ப்பாணத்தில் நடத்திய கூட்டத்துக்கு வந்த மக்கள் அவர்களை செருப்புகளால் அர்ச்சனை செய்து வரவேற்றது புதுமையானதல்ல.

1971ல் புரட்சிகர எண்ணத்துடனை ஆனல் புரட்சி பற்றிய அறிவு இல்லாத வாலிபரும் வனிதையரும் கம்யூனிஸ்ட் தலைவர்களின் அனுசரணையோடு பயங்கரமாக ஒடுக்கப்பட்ட போது அவர்களைப் பாதுகாப்பதற்காக எமது கட்சியும் இயங்காத வர்த்தக ஊழியர் சம்மேளனமும்மட்டுமே முன்வந்தன. இன்னும் நாம் அந்தப் புரட்சிகரக் கொள்கையில் அசைவற்று நிற்கின்றோம்.

ஒடுக்கப் பட்ட பகுதியினர் எவராக இருந்தாலும்—அடக்குமுறைக்கு எதிராக அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை எத்தகையதாக இருந்தாலும் எமது மார்க்கத்துக்கு முரணனதாக இருந்தாலும் கூட நாம் அவற்றைக் கண்டிக்கப் போவதில்லை. ஆனால் அடக்கப்பட்டவர்களைக்கண்டித்து அடக்குமுறையாளர்களை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த இரட்டைக் கொள்கையினை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

# தார்மீகம் என்பது இதுதானு?

**அ**ண்மைக்காலத்தில் காவல்துறையினரும் இராணுவத்தினரும் புதியதொரு வேட்டையில் ஈடுபட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

உண்மை எது என்பதை உள்ளூர ஆராய்ந்து வரும் சன்சோனிக்கமிஷன் முன், அடிபட்டு, உதைபட்டு, சித்திரவதை செய்யப்பட்டு. அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் தம் சோக வரலாற்றையும், தார்மீக ஆட்சியின் பலாபலனையும், நண்பர் எனக் கணித்தோரின் நயவஞ்சகச் செயல்களையும். இன்னும் திட்டமிட்டு நடத்திய தாக்குதல்களையும். அறிக்கையிடுகின்றனர். மக்களைக் காக்க வேண்டியவர்களே அவர்களின் காலனாக மாறிய விந்தையை, உலகம் உணர்ந்து கொள்கின்ற இந்த வேளையில், உண்மையை மூடி மறைக்க, தார்மீக ஆட்சியில் தலைவிரித்தாடும் கோரச் செயல்களை மக்களின் கண்ணிலிருந்து மறைத்து விட, நகர காவலர்களின் நற்பெயரைக்காத்துநிற்க திடீர் வேட்டையில் அக்கறை காட்டி, மக்களைத்தடுமாறச் செய்வதற்கான சூழ்ச்சியா இது என்று எண்ணும் படியாகவுள்ளது;

தேர்தலின் பின் விலைவாசி இறங்கும், நாம் கஷ்டமின்றி வாழலாம் என்று மனக்கோட்டை கட்டிய மக்கள் இன்று பங்கீட்டுப் புத்தகங்களைப் பறிகொடுத்த நிலையில், நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தின் முன் நலிந்து தேர்தல் விஞ்ஞாபனங்களையிட்டு வினு எழுப்ப முயலுகின்ற வேளையில். ஆட்சியாளர்கள் மிக முக்கியமான மற்றோர் வேட்டையில் கவனம் செலுத்துவதாகக் காட்டி, மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை எதிர்கொள்ளப் பின்வாங்குவது அவர்களை ஏமாற்றுவதாக இருக்கின்றது.

தார்மீகஅரசில்நாம்சுபீட்சமாக. சமாதானமாக வாழ்வோம் என்றமக்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது. தார்மீக நாட்டில் கொலைகள், கொள்ளைகள். தாக்குதல்கள். சித்திரவதைகள் மலிந்து விட்டன. மக்களை மிருகங்களிலும் கடையென எண்ணுவோர் தொகை அதிகரிக்கின்றது. தேசிய அரசுப் பேரவையில் நடைபெறும் பேச்சுக்கள், விவாதங்கள், பரிகசிக்கக் கூடிய முறையில் இடம்பெறுகின்றன. விவாதங்களும், எதிர்விவாதங்களும், அதற்கிடையிலான கூக்குரல்களும் குழப்பங்களும், ஒருவர் மற்றவர் மீது தொடுக்கும் கேள்விக்கணைகளும் பண்பற்ற முறையில் இடம் பெறுவது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.

தார்மீக அரசில் பேச்சுக்கு இடமில்லை. பேச அனுமதியில்லை; பார்க்க அனுமதியில்லை, சந்தேகத்தின் பேரில் எவருமே கைதியாக்கப்படலாம். பிணையில்லை. காலவரையின்றி சிறைப்படுத்தலாம். தம் மனம் போனபடி நகர காவலர்கள் எவரையும் தாக்கலாம், சித்திரவதை செய்யலாம்- கேவலமான முறைகளில் வீடுகளுட் புகுந்து தேடுதல் நடத்தலாம். தமக்கு உபயோகமென காண்பவற்றை எடுத்துச் செல்லலாம். இது தான் தார்மீகமா?

ஆட்சியாளரின் கண்துடைப்பில் நாம் அயர்ந்துவிடப்போவதில்லை. நீதியற்ற முறையில். காரணமின்றி, காலவரையின்றித் தடுத்து வைக்கப்பட்டும், சிறையில் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும்வரும் எம் இளைஞருக்காக நாம் குரல் கொடுக்கின்றோம். அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டிக்கின்றோம். காலவரையின்றிக் கைதிகளாக வைத்திருப்பதை கடுமையாக எதிர்க்கின்றோம். குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கவும், குற்றமற்றவர்களைக் காலம் தாழ்த்தாது விசாரணைக்குட்படுத்தி விடுதலை செய்யவும் வேண்டுமென வற்புறுத்துகின்றோம். தார்மீக அரசில் தர்மத்திற்கு இடமில்லாதே போனுல், அகிம்சையின் வழியில் அறப்போராட்டம் நடத்த நாம் பின்வாங்க மாட்டோம்.

— [illegible]

—1-ம் பக்கத் தொடர்

திரு. பொன். வேணுதாஸ் சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். ஊர்வலம் வந்த திசையடங்கிலும், பொலிசாராலேயே கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு ஆர்வம் வழிந்தோட மக்கள் அலையலையாக முண்டியடித்துக்கொண்டு நான் முந்தி நீ முந்தி யென தலைவருக்கு மாலை சூட்டி மகிழ்ந்தனர். தலைவர் ஊர்வலத்தில்வரும்போது ஆங்காங்கே விடுதலை வேட்டு முழக்கம்போல வெடிகள் சடசடவென வெடிக்கப்பட்டன.

ஊர்வலம் கோட்டைமுனை பாலத்தடியை அடைந்த போது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் வெள்ளம் கூடி விட்டதால், அதுவரை ஊர்வலத்தில் நடந்து வந்த திரு. அமிர்தலிங்கம் பொலிசாரின் ஆலோசனைப்படி ஜீப்பின் மேலே ஏறிநின்றி, மக்கள் கடலுக்கு வாஞ்சையுடன் கைகூப்பி தொழுதபடி வந்தார். தலைவர் பாட்டாளிபுர மைதானத்தை வந்தடைந்த பின்னர் திரு. வேணுதாஸ் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. திரு. இரா. அம்பலவாணரும், திருமதி அம்பலவாணரும் திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு மேடையில் வைத்து மாலை சூட்டி மலர்ச் செண்டு வழங்கி கௌரவித்தனர்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடலலை போல மக்கள் தலைகளே காணப்பட்ட பிரமாண்டமான இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.


## வியாபாரிகளுக்கு விசேட பரிசு

மில்க்வைற் 72 சவர்க்காரஞ் சுற்றிவரும் உறை 50,
அல்லது 36 சவர்க்காரஞ் சுற்றிவரும் உறை 100,
அல்லது 30 சதம் சவர்க்காரஞ்சுற்றிவரும்உறை50,
அனுப்பி துவாய் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்,

## மில்க்வைற் யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்ச் செய்தி வெளியிட்ட வார இதழ் மீது மட்டக்களப்பு இளைஞர்கள் ஆத்திரம்!

## அதைக் கிழித்தெறிந்து தீயிட்டனர்!

மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பொய்ச் செய்தி வெளியிட்ட வார இதழ் ஒன்றை ஆத்திரமடைந்த தமிழ் இளைஞர்கள் அப்படியேகட்டாககொண்டு வந்து சுக்கு நூறுகக்கிழித் தெறிந்ததுடன் அதைதீயிட்டு கொழுத்தவும் செய்தார்கள். இச்சம்பவம் 25-6-78 காலை நடைபெற்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு விரோதமான பத்திரிகை என்று கூட்டணித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் நாளேடு ஒன்றின் வார வெளியீடே இவ்வாறு தீயிடப்பட்டது.

தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களை வரவேற்குமுகமாக மட்டு நகர் வீதியெங்கும் மகர தோரணங்களையும் வரவேற்ற வளைவுகளையும் இரவோடிரவாக இளைஞர்கள் கட்டி நகரை அழகு படுத்தியிருந்தனர்.

ஆனால், இவ்வாறு அமிர்தலிங்கத்துக்கு வரவேற்பு அளிக்குமுகமாக கட்டப்பட்ட மகர தோரணங்களையும், வெடிகள் கொழுத்தப்பட்டதையும், வேறு ஒரு சம்பவத்துக்காக செய்யப்பட்டதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இதனால் உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்கள் அப்பத்திரிகையை கட்டுக்கட்டாக வாங்கிவந்து கூட்டணியின் பொதுச்சபை நடைபெற்ற வீட்டின் முன்னால் சுக்கல் சுக்கலாக கிழித்தெறிந்ததுடன் அவற்றுக்கு தீயிட்டார்கள். இளைஞர்களின் இந்தச் செய்கையால் பொதுக்குழுவில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.

### மட்டக்களப்பு—

—1-ம் பக்கத் தொடர்

கலந்து கொள்ளும் பொருட்டு கொழும்பிலிருந்து வாடகைக்கார் மூலம் உடனடியாக மட்டக்களப்புக்கு விரைந்தார். அவருடன் கூடவே விடுதலையான த. இ. பேரவை அமைப்புச் செயலாளர் மாவை சேனாதிராசா, பூ. நடேசானந்தம் ஆகியோரும் வந்தனர். கவிஞர் காசி ஆனந்தன் மேடைக்கு வந்ததும், அங்கு கூடியிருந்த பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உணர்ச்சி பொங்க வாழ்த்து முழக்கமெழுப்பி கரவொலி செய்து வரவேற்றனர்.

கூட்டமுடிவில் காசி ஆனந்தன் உரையாற்றும் போது, "எனது தோளுக்கு விழுந்த மாலைகள் யாவும் என் தலைவன் அமிர்தலிங்கத்தின் தாளுக்கு சமர்ப்பணம். அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களே தமிழ் இனத்தின் ஏகத் தலைவன்; அமிர்தலிங்கத்தை தலைவராக ஏற்கமாட்டோம் என்று சில காலத்துக்கு முன் கூறியவர்கள் எல்லாம் இன்று அவரையேதலைவராக ஏற்பது கண்டு மகிழ்கிறேன். தலைவர் அமிர் என்ன கட்டளையை இட்டாலும் நான் அதை ஏற்று நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்றார்.

### தமிழ் இளைஞர்கள் விடுதலை!

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டத்தின் கீழ் மே 24ம் திகதி தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருபதுபேரும் ஒரு மாததனிமைச்சிறையின் பின் யூன் 24ம் திகதி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தனிமைச்சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது, இவர்களுக்கு புதினப்பத்திரிகைகளோ புத்தகங்களோ எதுவும் தரப்படாதது மாத்திரமல்ல, இவர்களை இவர்களது இரத்த உறவினர்கள் சென்று பார்ப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### கூட்டணியின் புதிய யாப்பு இப்போது நடைமுறையில்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் அமைப்புவிதிகளையும் சட்டதிட்டங்களையும் கொண்ட புதிய யாப்பு இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டது. 21விதிகளையும் பல்வேறு உபவிதிகளையும் கொண்ட கூட்டணியின் புதிய யாப்பு, 24-6-78ல் மட்டக்களப்பில் கூடிய கூட்டணி பொதுக் முழுவினால் ஒவ்வொன்றாக நுணுக்கமாகப் பரிசீலித்து உரியதிருத்தங்கள், மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து இப்புதிய யாப்பு, 24-6-78ல் இருந்து உடன்டியாக நடைமுறைக்கு வந்துவிட்டதாக பொதுக்குழு பிரகடனப் படுத்தியுள்ளது.

திரு. பூ.கணேசலிங்கம் பா. உ,வின் மட்டக்களப்பு இல்லத்தில் நடைபெற்ற இரண்டு நாள் பொதுக்குழுக் கூட்டத்துக்கு நாடெங்கிலுமிருந்து 100க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இக் கூட்டத்துக்கு 87 வயதுநிரம்பிய பெரியார் மூதூர் ரேச் டீ. வாலி தலைமைதாங்கினார். திரு.செ. இராசதுரையும் சமுகமளித்திருந்தார்.

# பர்மாவில் முஸ்லிம் இனக் கொலை!

## இதற்கு எதிராக குரல் எழுப்புவோம்!

"இலங்கைத் தீவில் இனக்கொலைக்கு உள்ளாகியுள்ள தமிழ்ஈழ நாட்டினரால் பர்மா வாழ் முஸ்லீம் மக்களை எதிர்நோக்கும் இனவொழிப்பு நடவடிக்கைகளின் தாக்கத்தை நன்கு உணர முடிகிறது! அவர்கள்பால் அனுதாபம் காட்ட முடிகிறது.

தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை மீட்பதற்காகவும் புனரமைப்பதற்காகவும் போராடி வருவது போன்றே அரக்கன் மாகாணத்தைச் சார்ந்த பர்மா வாழ்முஸ்லீம் மக்களும் தம் தாயகத்தின் விடுதலைக்காகப் போர்க் கொடி உயர்த்தி உள்ளனர்: தமிழ் ஈழம் எப்படி தமிழர் இஸ்லாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அவர்களது தாயகமோ அது போன்றே பர்மாவின் அரக்கன் மாகாணமும் முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பூமி என வர்ணிக்கப்படுகின்றது.

அரக்கன் மாகாணச் சுதந்திரப்போராட்டத்தை முளையிலேயே கிள்ளி விடும் நடவடிக்கையாக பர்மா இராணுவ ஆட்சி அங்கு அரசாங்கத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. முஸ்லீம் மக்களை இனக்கொலைக்கு இலக்காக்கி வருகிறது. தாய்மார்கள், கன்னிப் பெண்களை கற்பளிப்புக்கு ஆளாகின்றனர் பச்சிளம் பாலகர் கொலை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. களா தேசத்தை நாடிவரும் இலட்சக் கணக்கான தாய்மார்கள், பிள்ளைகள் மத்தியில் ஆடவர்களைக் காண முடிவதில்லை! இது ஆடவர் யாவரும் கொலை செய்யப்படுவதைக் குறிக்கின்றதா அல்லது இனக் கொலைக்கு எதிராக அவர்கள் ஆயுதம் தாங்கிப் போராடுவதற்காக பர்மாவில் தங்கிவிட்டார்கள் என்பதைக் காட்டுகின்றதா வென உலகப் பத்திரிகைகள் வினா எழுப்பி உள்ளன.

அன்று வங்களாதேஷ் அகதிகள் இந்தியாவில் புகுந்த போது உலகம் பராமுகமாக இருந்ததால் இந்திய இராணுவம் கிழக்குப் பாக்கிஸ்தான் மீது படை எடுக்க நேர்ந்தது. வங்களா தேசம் உலகப் படத்தில் சுதந்திர நாடாக இடம்பெற முடிந்தது. பர்மா முஸ்லிம் அகதிகள் சார்பாக உலக நாடுகள் குரல் கொடுத்து வருவதால், வங்களா தேசம் தனித்து பர்மா மீது போர் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

உலக முஸ்லிம் நாடுகள் தலையீடுதான் பர்மாவில் ஒரு போராட்டத்தைத் தவிர்த்துள்ளது. அந்த சமாதானம் நீடிக்க வேண்டுமாகில் நட்பு நாடென்ற வகையில் பௌத்த நாடான ஸ்ரீலங்காவும் பர்மாவின் இராணுவ ஆட்சிக்கு ஆலோசனை நல்க வேண்டும் முஸ்லீம் இனக் கொலையை நிறுத்தும்படி அப்படிச் செய்யும்படி தேசியப் பேரவையில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் வற்புறுத்த வேண்டும். முஸ்லிம் தேசியப் பேரவை உறுப்பினர் அனைவருமே, அமைச்சர்களாகவுள்ள மூவர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பது மேற்படி கோரிக்கை வெற்றி பெற உதவ வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உடுவில் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தேசியப் பேரவையில் பிரச்சினை கிளப்பப் போவதாக அறிவித்துள்ளார். திரு. வி. தருமலிங்கம் அவர்கள் ஏற்கனவே வங்களதேச அகதிகள் சார்பில் போர் குரல் எழுப்பியது தெரிந்ததே! அப்போது மௌனம் சாதித்தது போன்றே பர்மா முஸ்லிம்கள் பிரச்சினையிலும் தேசியப் பேரவை முஸ்லிம் உறுப்பினர்கள் மௌனம் சாதிக்க மாட்டார்கள் என எதிர் பார்ப்போம். திரு. தர்மலிங்கத்தின் குரல் பர்மா வாழ் முஸ்லிம்களின் குரலாகவே தேசிய அரசுப் பேரவையில் ஒலிக்கவுள்ளது. உலகெங்கும் உள்ள முஸ்லீம்கள் பர்மா முஸ்லீம்களுக்காக குரல் தரும் போது, தானுடாவிட்டாலும்தன்சதை ஆடவேண்டியதாகஇருக்களமது நாட்டு முஸ்லீம் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்மட்டும் மௌன விரதம் அனுட்டிக்கலாமா?

(வாராந்தக் கருத்தரங்கில்— திரு. [illegible] பேசியது)

### தமிழினத்தின் யாழ்வுக்காக...

—1-ம் பக்கத் தொடர்

எனக்கு எப்போதுமே அளவுக்கதிகமான விசுவாசம் உண்டு. அமரர் இராசமாணிக்கம், அமரர் இராசவரோதயம் அமரர் அறப்போர் அரியநாயகம், அமரர் மாணிக்கவாசகர் போன்ற எத்தனையோ பெருந்தலைவர்களை நமது இயக்கத்துக்கு தந்த பெருமை இந்த மட்டக்களப்பு மண்ணுக்கு— கிழக்குமாகாண மண்ணுக்கு உரியது. நான் என்னுடைய தமிழறிவை — சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கிய செல்வங்களின் சுவையை— மட்டக்களப்பு ஈன்றெடுத்த சுவாமி விபுலானந்தர் அவர்களிடமிருந்துதான் பெற்றுக்கொண்டேன், எனவே எனக்கு தமிழ் அறிவூட்டிய இந்த மண்ணுக்கு எனது முதல் விசுவாசம் எப்போதும் உண்டு.

இப்போது நாட்டில் சிங்கங்களை விட புலிகளுக்குத்தான் மதிப்பு அதிகம். ஆயினும், நான் இங்கு வருவதறிந்து என்னை 'அசிங்கம்' என்று குறிப்பிட்டு யாரோ சிலர் சுவர்களில் எழுதியதாக இளைஞர்கள் ஆத்திரப்பட்டனர். நான் அவர்களுக்கு சொல்வேன்— என்னை அசிங்கம் என்று யாராவது ஏளனம் செய்வதுபற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் என்னை அசிங்கம் என்று குறிப்பிட்டு எழுதியவர்கள் எனது அருமை நண்பர் இராசதுரையை சிங்கம் என்று குறிப்பிட்டார்களாம். அது எனக்கு மகிழ்ச்சியையே தருகிறது. அவர் மறுபடியும் சிங்கமாக மாறி இயக்கத்துக்காகவும், இலட்சியத்துக்காகவும் துடிப்புடன் பழைய வேகத்துடன் பாடுபடவேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பெருந்தலைவர்களான நண்பர் இராசதுரையும், தம்பி காசிஆனந்தனும், இவர்களுடன் மட்டக்களப்பு தொகுதியில் ரௌடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து இயக்கத்தைவளர்த்திட நெருக்கடிநேரத்தில் கைகொடுத்து உதவிய அஞ்சாநெஞ்சன் பட்டிருப்பு கணேசலிங்கமும் இணைவார்களானால், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப்பகைவர்கள்யாரும் தலை நீட்ட முடியாது. இயக்கம் தலை நிமிரும். அவர்கள் மீண்டும் இணைந்து பணியாற்றுகின்ற சூழ்நிலை இன்று தோன்றியுள்ளது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து, மட்டக்களப்பு தமிழ்மக்களின் எழுச்சியையும் உணர்ச்சியையும், என் மீதும், எமது இயக்கத்தின் மீதும் அவர்கள் கொண்டுள்ள அழுத்தமான நம்பிக்கையையும் எடுத்துக்காட்டிய தமிழ் இளைஞர்பேரவைத் தம்பிமார்களுக்கு எனது நன்றிகளை தெரிவிக்கிறேன்."

இக்கூட்டத்தில் தந்தை செல்வாவின் பள்ளித் தோழரும் 84 வயதுநிரம்பப்பெற்றவருமான வண. பிதா கிரௌதர், திருவாளர்கள் இரா. சம்பந்தர் பா. உ, வெ. யோகேஸ்வரன் பா. உ, பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ, த. இராசலிங்கம் பா. உ, மு.சிவசிதம்பரம் பா. உ, த. இ. பேரவையைச் சேர்ந்த ஆ. ரகுபதிபால சிறீதரன், சட்டத்தரணி கனகமனோகரன், இரா. பன்னீர்ச் செல்வன், செந்துராசா, கொழும்புக்கிளைத் தலைவர் ஈழவேந்தன், ஆசிரியர் அல்போன்ஸ்மேரி, சுதந்திரன் ஆசிரியர் திரு: கோவைமகேசன் ஆகியோர் உரையாற்றினர்.

இவ்விழாவுக்கு மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரையும் வருகை தந்திருந்தார்.

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்க, வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org